24.10.2025 OS.No.116/2022 Dw1 Name :.ராபியாகவல்

குறுக்கு விசாரணை

1. என்னுடைய கணவர் இன்று என்னுடன் நீதிமன்றத்திற்கு வரவில்லை. என் கணவர் ஆங்கிலத்தில் கையெழுத்து போடுவார். நானும் ஆங்கிலத்தில் கையெழுத்து போடுவேன். எனக்கு சொந்தமான சொத்து வாணியம்பாடி திருவள்ளுவர் நகர் பைபாஸ் ரோட்டில் உள்ளது. நான் கிரையம் வாங்கிய சொத்து. நீதிமன்றத்தில் உள்ள எதிர்வழக்குரையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு முன் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் எனக்கு வரவில்லை. வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள என்னுடைய தாயார் வீட்டுடையது ஆகும்.
2. அந்த முகவரில் நான் குடியிருக்கவில்லை. நான் பைபாஸ் ரோட்டில் குடியிருக்கிறேன். வா.சா.ஆ.6 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள முகவரி என்னுடைய தாயார் வீட்டுடையது. கொடையாஞ்சியை சேர்ந்த ஜெய்சாம்ராஜ் என்பவரை நான் பார்த்ததில்லை. அவரை யார் என்று தெரியாது. அப்துல் கபூர் மகன் சிராஜ் உதின் என்பவர் என்னுடைய கணவர் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என் கணவருடையது கிடையாது. வா.சா.ஆ.6 ஆவணத்தை நான் இதற்கு முன் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பார்வையிடவில்லை.
3. வா.சா.ஆ.6 ஆவணத்தில் என்னுடைய கையெழுத்து எதுவும் இல்லை. வா.சா.ஆ.8 ஆவணத்தில் என்னுடைய கையெழுத்து இல்லை.

வாணியம்பாடி சின்டிகேட் வங்கியில் எனக்கு வங்கி கணக்கு உள்ளது. என் கணவருக்கு வாணியம்பாடி இந்தியன் வங்கியில் கணக்கு இல்லை. எனக்கு வாணியம்பாடி இந்தியன் வங்கியில் கணக்கு இல்லை. ஸ்டேட் பேங்கில் தான் உள்ளது. 2019, 2020 ஆண்டுகளில் என்னுடைய வங்கி கணக்கில் பணம் போடபட்டுள்ளது என்றால் சரியல்ல. என் கணவரின் வங்கி கணக்கில் பணம் போடபட்டுள்ளது என்றால் அவ்வாறு இல்லை. வங்கி கணக்கு ஸ்டேட்மன்ட் எதையும் நான் பார்த்ததில்லை.

4. கடைசியாக எப்போது வங்கி கணக்கை ஆப்ரேட் செய்தேன் என்று நியாபகம் இல்லை. வங்கி கணக்கு ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளோம். வாதி நான் கேட்டுகொண்டதன் பேரில் என்னுடைய வங்கி கணக்கில் ரூ.2,00,000/- டேபாசிட் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மீண்டும் ரூ.1,00,000/-மும், மற்றொரு தேதியில் ரூ.1,00,000/- டேபாசிட் செய்துள்ளார் என்றால் சரியல்லல.

5. 4வது முறையாகவும் ரூ.1,00,000/- டேபாசிட் செய்துள்ளது என்றால் சரியல்ல. என் கணவரின் வங்கி கணக்கில் ரூ.1,00,000/- டேபாசிட் செய்யபட்டுள்ளது என்றால் சரியல்ல. ரூ.6,00,000 வாதியிடமிருந்து நாங்கள் கடன் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. அதற்காக தான் வா.சா.ஆ.6 ஆவணத்தை வாதிக்கு எழுதிகொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதில் சாட்சியாக என் கணவர் மற்றும் ஜெயசாம்ராஜ் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கிற்காக கையெழுத்துகளை மறுத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

பதிலில் என் கணவர் சாட்சி கையெழுத்து போடவில்லை என்ற விவரத்தை கூறவில்லை என்றால் சரியல்ல.

6. நீதிமன்றத்தில் உள்ள வக்காளத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து நிபுணர் ஆய்விற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவில்லை. பதிலில் உள்ள விவரங்களை வழக்கறிஞரிடம் நான்தான் கூறினேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. ஜெயசாம்ராஜை நாங்கள் விசாரிக்கவில்லை.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 24/10/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.10.24 15:33:05 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.